உ

# துயரத் துளிகள்

திருமதி மாமாங்கம் கனகசுந்தரம்

துர்க்காபுரம்

தெல்லிப்பழை

20-07-91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

தெல்லிப்பழை - துர்க்காபுரம்

பிரபல சைவ வேளாண் மரபினரும்

கனகரத்தின முதலியார் வழித்தோன்றலுமான

# திருமதி
# மாமாங்கம் கனகசுந்தரம்

அவர்கள்

சிவபதமெய்தியமை

குறித்து

வெளியிடப்பெற்ற

# நினைவு மலர்

மலராசிரியர் :

பிரம்மஸ்ரீ இ. சபாரத்தினக் குருக்கள் அவர்கள்

(இளைப்பாறிய அதிபர், பன்னாலை)

பிரசோற்பத்தி வருடம் ஆடி மாதம்

**1991**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்னுமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் அன்பு அன்னையின்

**நினைவு மலரை**

அவர்களின் பாதமலர்களில்

அன்புடன் சூட்டிச்

சமர்ப்பிக்கின்றோம்,

**க. கணேசரத்தினம்**
**க. சுப்பிரமணியம்**
**திருமதி சரஸ்வதி அப்பாத்துரை**
**திருமதி வள்ளிநாயகி நாகரத்தினம்**
**க. கங்காதரன்**

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை,
1991-07-20.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமதி மாமாங்கம் கனகசுந்தரம் அவர்கள்

தோற்றம் : 1897 - 10 - 21

மறைவு : 1991 - 06 - 22

## கட்டளைக் கலித்துறை

ஆதுலர்க் கன்பு மரனடி யார்தம் அடிப்பணிவும்
தீதில் பொறையும் செய்நலன் பேணு திறலுளமும்
ஓதுயர் கற்பக தாரு நிகரா முயர்கொடையும்
மேதக்க நின்நிக ருண்டோ விளம்பிட மேதினிக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்

# பஞ்சபுராணம்

## தேவாரம்

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்துணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதிநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

## திருவாசகம்

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனை
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலம்மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா! நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழு(து) அருவி கண்ணீரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்? கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி,
எங்கும் குழாம்பெருகி,
விழவொலி விண்ணளவும் சென்று விம்மி
மிகுதிரு வாரூரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழவிடை யாற்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடிஎம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

"ஆலமே அமுதமாக உண்டுவா னவர்க் களித்துக்
காலனை மார்க்கண் டர்க்காய் காய்ந்தனை அடியேற் கின்று
ஞாலம்நின் புகழே யாக வேண்டும்நான் மறைக ளேத்துஞ்
சீலமே ஆல வாயிற் சிவபெரு மானே" என்றார்.

## திருப்புகழ்

உம்பர்தரு தேனு மணிக் கசிவாகி
ஒண் கடலிற் தேனமுதத்(து) உணர்வூறி
இன்பரசத் தே பருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே!
தம்பிதனக் காகவனத் தணைவோனே!
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே!
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே!
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே!

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தெல்லிப்பழை — துர்க்காபுரம்

# திருமதி மாமாங்கம் கனகசுந்தரம்

அவர்கள்

சிவபதமெய்தியமை

குறித்த

# நினைவுப்பாக்கள்

## வெண்பா

**செப்புபிர சோற்பத்தி சேரானி சார்பூர்வம்
ஒப்பிலே காதசியை யுற்றசனி — இப்புவியில்
உற்றபுகழ் மாமாங்க மென்னுமுயர் மாதரசி
மற்றிறைவன் தாளடைந்த நாள்.**

## ஆசிரியப்பா

மருவுயாழ்ப் பாண மாநக ரதன்கண்
வடபா லாக மன்னித் திகழும்
தெல்லிப் பழையெனத் திகழு நற்பதி
வாழிட மாக மன்னிய மகிபன்
கருதுநற் கனக ரத்தின முதலி
தன்வழித் தோன்றிய தகைமை யாளன்
முன்னோர் போற்றும் மூத்த தம்பு
செல்லப் பிள்ளையாம் தெரிவையை மணந்தே
செய்யுந் தவத்தினி லெய்திய நங்கை
மாமாங் கம்மென மன்னிய மாது
பொற்பு மிக்குறு பூவை நல்லாள்
நாணம் முதலா நண்ணிடு குணங்கள்
தானமைந் துற்ற தையலர் திலகம்
கனகசுந் தரந்தன் கருதிடு மனைவியாய்,
சோதிப் பிள்ளையாம் தோகையை மணந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருநில முதல்வன் இராச நாயகம்
சிங்கநா யகமெனச் செப்பிடு நாமன்
இராச நாயக ஏந்தல் தன்மனை
காசினி போற்றும் கனக நாயகி
புத்திர ரென்னப் புவியினி லுற்ற
இராசம்மா வென விளைந்திடு தையலும்
வள்ளிப் பிள்ளையாம் வனிதையை மணந்தே
சரஸ்வதி துணைவனுய்த் தரணியி லுற்ற
அவனி புகழ்ந்திடும் அப்பாத் துரைதனை
நன்ம கனாக நானிலத் துற்ற
பூதல முதல்வன் பொன்னுத் துரையும்
சின்னையா வெனும் செம்மல்தன் துணைவியாய்
பத்மா வதியெனும் பாவைதன் கணவன்
செகதல முதல்வன் திருச்செல் வத்தொடு
இராச ரத்தின ஏந்தல் தன்மனை
பத்மாவதி யெனும் பாவை தானும்
புஷ்ப ராணிதன் பொருந்துநற் றுணைவன்
திருஞான மெனச் செப்பிடு நாமனும்
ஜெயசிங்க நாமனின் சேர்ந்திரு துணைவி
லீலா வதியென விளைந்திடு தையலும்
குளோடெற் றெனும் குவலய முதல்வி
மனையாளாக மன்னிய மகிபன்
திருநாவுக் கரசெனச் செப்பிடு வோனும்
பால சுப்பிர மணியம் தன்மனை
புவனேஸ் வரியெனப் பொருந்துநன் மாதும்
சாந்திதன் துணைவன் கருணா னந்தனும்
தன் மக்களாகத் தரணியி லுற்ற
நானிலம் போற்றும் நகுலாம் பிகையும்
செல்லம் மாவெனும் தேவி மணாளனும்,
இந்திரா தேவிதன் இயைந்திடு துணைவன்
பார்புகழ் மகிபன் பத்ம நாதன்
திருஞான மெனும் செம்மலை மணந்த
பூதலம் போற்றும் புஷ்ப ராணி
செல்வ ராணியாம் தேவி மணாளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவிபுகழ் மேலோன் புஷ்ப நாதன்
கங்கா தரன்தன் காதலி யாகச்
சேர்ந்திடு நங்கை தேவிகா ராணி
சார்சிவ சங்கர நாதன் தன்துணை
பார்புகழ் நங்கை பத்ம ராணி
உத்தம குணத்தோன் உவந்தநன் மாது
பெருமை சார்ந்திடு பிறேம ராணி
நற்புத் திரரென நானிலத் துற்ற
செகதலம் நீத்த சின்னப் பாவும்
உடன்பிறப் பாக வுற்றநன் மாது,
வைத்திய நாத முதலி வழிவரு
அருளம் பலமென அமைந்திடு நாமன்
தையற் பிள்ளையாம் தையலை மணந்தே
புவியினிற் பெற்ற புண்ணியப் பேறு
மலேசியா தன்னில் மன்னும் வைத்திய
கலாநிதி யாகிக் கடமை யாற்றிய
காசினி போற்றும் கனக சுந்தரம்
மணவாள ஞகமாநிலத் துறவே
மங்கள நாயகி தன்னை மணந்தே
கருதுபற் றீசியன் கல்விக் கழக
கம்பி யூற்றர் விரிவுரை யாளராய்
அமைந்திடு நகர அபிவிருத்தி யுறு
அதிகார சபையில் இலிகிதராக அரும்பணி யாற்றும்
கங்கா தேவியைக் காதலித் துற்றே
சஞ்சீவன் தனைத் தரணியிற் பெற்ற
விளங்கும் புகழ்சார் விமல ராசா
கொழும்புமா நகரில் குலவும் கப்பற்
கூட்டுத் தாபனம் தன்னி லுற்றிடு
பொறி யியலாளராய்ப் பொருந்திய மகிபன்
சுதந்திர நாதன் துணைவி யாகியே
கோபி நாதொடு குலவும் பிறேமநாத்
தம்மைப் பெற்ற தையல் நல்லாள்
நிரஞ்சலா வென்ன நேர்ந்திடு தையல்
தன்மக்க ளாகத் தான்பெற் றுவந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசினி போற்றும் கணேசரத் தினமும்
இரத்தின மனிதனை இந்நிலத் துற்றே,
கோப்பாய் தன்னிற் குலவு சுகாதார
வைத்திய அதிகாரி யாகி வைகுறும்
யோக விநாயக டாக்ரரைச் சேர்ந்தே
யோகினி யென்னும் தோகையைப் பெற்ற
மந்திகை அரசினர் வைத்திய சாலை
அமைபல் வைத்திய அதிகாரி யாகும்
லலிதா வென்ன வியைந்திடு டாக்ரரும்,
அனுஷியா நங்கை அருந்துணை யாக
சுகப் பிரியனொடு புகல்பிர தாகினி
தம்மைப் பெற்றே மனமகிழ் வுற்ற
யாழ்நகர் தன்னில் இயைந்திடு போதனு
வைத்திய சாலையில் தான் பணியாற்றும்
ரவிராஜ் என்னும் டாக்டர் தானும்
மன்னு புத்திரரென மாநிலத் துற்ற
மேவு மானிப்பாய் மெடிக்கல் கிளினிக்
வைத்திய அதிகாரி யாகிய மகிபன்
சுகுண மார்ந்திடு சுப்பிர மணியமும்
இயைந்திடு டாக்டராய்த் தானினைப் பாறிய
அப்பாத் துரைதனை அன்பொடு மணந்தே
அவுஸ்தி ரேலியா தன்னில் அமர்ந்தே
பொறியிய லாளராய்ப் பொருந்தும் பணிபுரி
சிவபால னென்னச் சேரும் கலாநிதி
தன்னை மணந்த டாக்டர் மாலதி
கொழும்புமா நகரிற் குலவும் கிங்ஸ்ரன்
இன்ரர் நாஷனல் ஸ்கூல் தன்னில்
மன்னுமா சிரியை யாகிடு மங்கை
ஓமான் தன்னில் உற்றகொம் பியூற்றர்
அனேலிசிஸ் ஆகஅமைந்திடு சேவை செய்
திவாகரன் தன்னைச் சேர்ந்திடு நங்கை
மாநிலம் போற்றும் மங்கை மாதினி
யாழ்நகர் மன்னும் பல்கலைக் கழக
மாணவ ளாகி மாண்பு மிக்குறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் எஸ் சீயாய் எய்தும் உயிர்த்தொழில்
நுட்பவியலில் உற்றிடு கலை பயில்
செகதலம் போற்றும் செந்தூரநாமன்
மன்னுபுத் திரரென மனமகிழ் வுற்ற
கருதிடு மிராம நாதன் கல்லூரியில்
ஆசிரியையாகி அமர்ந் திளைப் பாறிய
சால்பு மிக்குறு தையல் சரஸ்வதி
ஸ்கந்த வரோதயம் எனும் கல் லூரி
அதிப ராகியே அமர்ந்திளைப் பாறிய
பி. ஏ. பட்டதாரி நாக ரத்தினம்
தன்பெருந் தலைவனுய்த் தரணியி லமைய
யூ. கே. தன்னில் உற்றிடு கணக்கியல்
மாணவ னுக மன்னும் சுதர்சன்
பகர்ந்திடு கேம்பிறிஜ் பல்கலைக் கழகம்
புகலும் பொறிஞர் பீ. எச். டீ. மாணவன்
சுகுண மார்ந்திடு சுகந்தனும் நாமன்
யூனியன் கழகத் துயர்கலை பயிலும்
சுகிர்தனென்றே சொல்லிடு மாணவன்
தம்மைப் பெற்ற தையல் நல்லாள்
வையகம் போற்றும் வள்ளி நாயகி
அவுஸ்திரேலியா தன்னி லமர்ந்திடும்
தேவிகாராணி சேர்துணை யாக,
பொறியிய லாளராய்ப் பொருந்தும் மாணவன்
பரதனென்னப் பகர்ந்திடு நாமனும்
பகரும் மெல்பூண் பல்கலைக் கழக
வர்த்தக மாணி மாணவி யாகும்
பகர்ந்திடு நங்கை பாமா தானும்
தன் மகாரென்னத் தான்பெற் றுவந்த
பொறியிய லாளராய்ப் பொருந்து வைகியே
அவுஸ்தி ரேலியா அமர்ந்தே பணிபுரி
கருதும் புகழ்சார் கங்கா தரனுர்
என்போர் தம்மை எய்துபுத் திரரென
மாநிலத் துற்ற மங்கை நல்லாள்
கருதிடும் தெல்லி காசி விநாயகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்மை சாந்திடு துர்க்கா தேவி
மாவை மாநகர் மன்னுநன் முருகன்
நகுல கிரிப்பதி நகுலேஸ் வரனூர்
ஆலயங் களிலே அமைந்திடு நித்திய
பூசை விழாக்கள் புரிந்தே மகிழ்ந்து
வாழ்வுகொண் டருளிய வனிதையர் திலகம்
மின்னூர் சடாமுடிச் செம்மல் சேவடி
சேரும் விருப்பால் செகதலம் தன்னில்
தன்வாழ் வொழித்துத் தான்மறைந் தனரே.

## புலம்பல்கள்

## பொதுப் புலம்பல்கள்

அன்பும் பொறையும் அடியவர் நேசமும் ஆதுலரின்
துன்பந் தவிர்த்தரு ளீகையும் மாந்தர் துதிநடுவும்
மன்னுமெம் மாமாங்க மென்றே யழைத்திடும் மாமகளே
என்னே மறைந்தனை எவ்விடம் சேர்ந்தனை யெமைவிடுத்தே.

## மக்கள் புலம்பல்

புத்திர ராமெமைப் போற்றி வளர்த்தவெம் மன்னையரே
சித்தம் கலங்கித் திகைத்தே தினம்தினம் வாடுகின்றோம்
இத்தலத் தெம்மை விடுத்தே இறைபதம் சேர்ந்தனையால்
நித்தமும் வந்துநாம் காண்பதற் கிங்கினி யாருளரே.

## பெருமக்கள் புலம்பல்

பெற்றமக்கள் போலப் பெருமக்கள் எங்களையும்
போற்றி வளர்த்தீர் புவியதனில் — சற்றுமே
சிந்தியா தேவிடுத்து எங்குதான் சென்றடைந்தீர்
அந்தோ யார்துணைவ நின்று.

## மருமக்கள் புலம்பல்

மாமியரே எங்கள் மனநினைவுக் கேற்பவே
பூமிதனில் வாழ்ந்தவெம் பொன்மணியே — நாமின்று
கன்றை இழந்தலறும் ஆப்போற் கலங்குகின்றோம்
இன்றெம்மைத் தேற்றிடுவோர் யார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரி புலம்பல்

உற்றவென் சோதரியென் றுள்ளம் மகிழ்வுறவே
பற்றுடனே வாழ்ந்தீர் பலகாலம் — மற்றுலகில்
என்னகுறை கண்டீர் என்னே எனைவிடுத்தீர்
எந்நாளிற் காண்பே னினி.

## பேரர் புலம்பல்

பேரரா மெங்கள்மேற் பேரன்பு தான்கொண்டு
பாரதனில் எம்மை வளர்த்தனிரே — பேரரெமைச்
சிந்தியா தேவிட்டுச் சென்று மறைந்திட்டீர்
எந்தநாள் வந்துறுவி ரீங்கு.

## பீட்டர் புலம்பல்

பீட்டரா மெங்களொடும் பேருலகி லேயென்றும்
நாட்டமுடன் வாழ்ந்தவெம் நங்கையே — வாட்டமுறும்
சின்னஞ் சிறுவரெமைச் சீராட்டிப் பாராட்ட
இந்நா ளெவரிங் குளர்.

## சுற்றம் புலம்பல்

சுற்றத்தா ரெங்கள் சுகநிலைமை தான் வினவி
உற்றகுறை போக்கி யுடனிருந்தீர் — தெற்றெனவே
சென்று மறைந்திட்டீர் சேர்ந்தீர் சிவன்பாதம்
இன்று ரெமைத் தேற்று வார்.

## தேற்றம்

மன்னுமுயர் மாமாங்க மாதரசி தான்மறைந்தார்
என்னேகாண் ஏங்கி இரங்குகின்றீர் — இந்நிலத்தே
இன்றிருந் தார்தம்மை நாளை யிருப்பரென்
றெண்ணத் திடமில்லை யால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நிறைவாழ்வு கண்ட புண்ணியவதி

**சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்**
*(ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை)*

ஆலயப் பணிக்கும் அறப்பணிக்கும் ஒரு எடுத்துக் காட்டாக விளங்கும் குடும்பம் அமரர் கனகசுந்தரம் குடும்பம். தெல்லிப்பழை கிழக்கில் இக் குடும்பத்தின் சிறப்பை எல்லோரும் பாராட்டுவர். இப் பெரியாரின் வாழ்க்கைத் துணைவியாக வாய்க்கப் பெற்றவர் தான் சின்னம்மாக்கா என்ற சீமாட்டியார். இவவுடைய முதிர்வு பெற்ற வாழ்வு மிகவும் மகிமைக்குரியது. தொண்ணூற்றைந்து ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்த பெருமாட்டியான இவவுடைய பெயர் ''மாமாங்கம்'' என்று அழைக்கப்பட்டது. அந்தப் பெயரிலேயே ஒரு தெய்வீகம் தொனிக்கிறது. சைவ மக்களால் போற்றி ஏத்தும் தீர்த்தம் மாமாங்கத் தீர்த்தம் என்பதை எல்லாரும் அறிவார்கள். எனவே இந்த மகத்துவமான நாமத்தைக் கொண்ட அம்மையாரின் வாழ்வும் நிறை வாழ்வாகவே அமைந்து விட்டது. கட்டிய கணவனாலும் பெற்ற பிள்ளைகளாலும் எடுத்த மருமக்களாலும் பெருமை பெற்ற அம்மையாரர் இவர்.

எங்கள் துர்க்காதேவி தேவஸ்தானத்தோடு இவவுடைய குடும்பத்துக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. அமரர் கனகசுந்தரம் அவர்களே இன்றைய திருக்கோயில் கர்ப்பக்கிருகத்துக்கு அத்திவாரக்கல் நாட்டியவர். அன்றியும் இவ்வாலயத் தம்ப மண்டபத் திருப்பணியில் மிகுதியும் பங்கு கொண்டு அமைத்துத் தந்த சிறப்பும் இவர்களின் குடும்பத்துக்கு உண்டு. மேலும் எமது துர்க்காதேவி ஆலய நிர்வாக சபையில் தனாதிகாரியாக இருந்து கண்ணியமான சேவையாற்றிய அம்மையாரின் மூத்த மகன் திரு. க. கணேசரத்தினம் அவர்களின் சேவையை என்றும் நாம் மறக்க முடியாது. கோயில் திருப்பணிகள் நடைபெறும் காலமெல்

லாம் முழுநேரப் பணியை இவ்வாலயத்துக்கு வழங்கியவர். தேர்த்திருப்பணி, கோபுரத்திருப்பணி, தீர்த்தக்குளத்திருப் பணி மூன்றுக்கும் முன்னின்று அயராது உழைத்தவர் இவர். இவர்களின் குடும்ப உற்சவமாக மகோற்சவ 8ஆம் திருவிழா நடைபெறுகிறது. சில ஆண்டுகளாகத் தீர்த்த உற்சவமும் அம்மையாரின் மகனூர் திரு. க. சுப்பிரமணியம் சங்கற்பம் ஏற்று நடாத்தி வருகிறூர்.

தெல்லிப்பழை காசிவிநாயகரைக் குல தெய்வமாகக் கொண்ட மாமாங்கம் அம்மையார் அங்கும் தமது குடும்பச் சார்பில் உற்சவங்களை நடாத்திச் சிறப்புப் பெற்றவர்.

> ''இல்லதென் இல்லவள் மாண்பானூல் உள்ளதென்
> இல்லவள் மாணுக் கடை.''

என்ற குறட்பாவுக்கேற்ப அம்மையாரின் மாண்பினூல் அச் குடும்பம் முழுவதுமே மேன்மை பெற்றதெனலாம். எனவே அமரத்துவம் அடைந்த அம்மையாரின் மறைவு குறித்து எமது தேவஸ்தானம் உளமார அஞ்சலி செலுத்தி நிற்கிறது.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**தங்கம்மா அப்பாக்குட்டி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி மாமாங்கம் கனகசுந்தரம்
## அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சிகரமாக விளங்கும் வலிகாமம் வடக்குப் பிரிவைச் சேர்ந்த தெல்லிப்பழை என்னும் உயரிய கிராமத்தில் சீரும் சிறப்பும் மிக்க குடும்பத்திலே சின்னப்பா மணியகாரரின் மூத்தமகன் திரு. மூத்ததம்புவினதும் தண்டிகை சின்னப்பர் மகள் செல்வி செல்லத்தினதும் தவப்பயனாக 1897ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 21ஆம் திகதி ரேவதி நட்சத்திரத்தில் மாமாங்கம் அவர்கள் அவதரித்தார்.

இவர் தமது கல்வியை தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்றார். இவர் கல்வியோடு மட்டும் நின்று விடாது தையல், பன்னவேலை, மனையியல் ஆகிய கலைகளிலும் சிறந்து விளங்கினார். இவர் இரத்தினேசர் அருளம்பலத்தினதும் சரவணமுத்து தையல்பிள்ளையினதும் மகன் கனகசுந்தரத்தை மணந்தார். அவ் இருவரும் மலரும் மணமும் போல் இல்லறமாகிய நல்லறத்தை மேற்கொண்டார்கள். இவரது கணவனார் உதவிவைத்திய அதிகாரியாக மலேசியாவில் கடமையாற்றி வந்தார். அங்கு பதின்மூன்று வருடங்கள் சேவையாற்றிய பின் தமது சொந்த ஊரில் பிரிய பத்தினி செல்வக் குழந்தைகள் மத்தியில் இருந்து தமது வாழ்க்கையை நடத்த வேண்டும் என்ற விருப்பத்தினால் பதவியில் இருந்து இளைப்பாறி சொந்த ஊருக்கு திரும்பினார். திரும்பியதும் அவர் அரசாங்க வைத்தியசாலைகளில் இலங்கையின் பல பாகங்களிலும் கடமையாற்றி வந்தார். யாழ்ப்பாணம் ஹேயல் மருந்துச்சாலையில் (டிஸ்பென்சறி) மருந்துப் பொறுப்பாளராக சில வருடங்கள் சேவை செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் இல்லற வாழ்க்கையின் பயனுக கணேச ரத்தினம், சுப்பிரமணியம், சரஸ்வதி, வள்ளிநாயகி, கங்காதரன் என்னும் ஐந்து நன்மக்களைப் பெற்றனர். அன்னரது சிரேஸ்ட புத்திரன் கணேசரத்தினம் நெடுஞ்சாலைப் பகுதி மேற்பார்வையாளராக பல வருடங்கள் கண்டியில் பணி புரிந்து பின் தொழில்நுட்பவியல் அதிகாரியாக உயர்ச்சி பெற்று தமது சொந்த ஊரில் கண்ணும் கருத்துமாய் சிறப்புடன் கடமை புரிந்து தற்போது இளைப்பாறி உள்ளார். திரு. கணேசரத்தினம் தனது தாய்வழித் தோன்றிய மாமன் மகள் மங்களநாயகியை விவாகம் செய்தார். இரண்டாவது மகன் சுப்பிரமணியம் தந்தையைப் போன்று கொழும்பு வைத்தியக் கல்லூரியில் உதவி வைத்தியராக பயிற்சி பெற்று பல வருடங்களாக நாட்டின் பல பாகங்களிலும் செவ்வனே கடமையாற்றி தற்பொழுது மானிப்பாய் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிறப்பாக தொண்டு ஆற்றி வருகின்றூர். இவர் சுன்னுகம் சைவப் பெரியார் பொன்னுத்துரை அவர்களின் புதல்வி இரத்தினமணியை திருமணம் செய்துள்ளார். மூத்த மகள் சரஸ்வதி அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு இராமநாதன் மகளிர் கல்லூரியில் பல்லாண்டுகளாக ஆசிரியை ஆக கடமையாற்றி தற்பொழுது இளைப்பாறியுள்ளார். இவர் தாய் மாமன் பொன்னுத்துரை அவர்களின் ஏகபுத்திரன் அப்பாத்துரையை மணம் செய்துள்ளார். இளைய புத்திரி வள்ளிநாயகி சுன்னுகம் திரு. பொன்னுத்துரையின் புதல்வர் நாகரத்தினத்தை மணம் செய்து சிறப்பாக இல்லற வாழ்க்கையை நடாத்தி வருகின்றூர். அன்னரது விருப்பத்திற்கும் நன்மதிப்பிற்கும் உரிய கனிஸ்ட புத்திரன் கங்காதரன் கொழும்பு பல்கலைக் கழகத்தில் கற்று பொறியியல் துறையில் பட்டம் பெற்று அதன் பின் லண்டன் மாநகருக்குச் சென்று உயர்ந்த தகைமைகளைப் பெற்று தற்போது பொறியியலாளராக அவுஸ்ரேலியாவில் சேவையாற்றி வருகின்றூர். இவர் தாய் மாமன் சின்னப்பாவின் மகள் தேவிகாராணியை திருமணம் செய்துள்ளார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருக்கு உதவுவதில் பேரின்பம் காணும் இவ்அம்மை யார் பிறருக்கு உதவும் நோக்கமாக பல தொண்டுகளில் ஈடுபட்டு வந்துள்ளார். இவர் இல்லற வாழ்க்கையை "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளார். தனது இல்லத்திற்கு வருபவர்களை இன்முகம் காட்டி வரவேற்று விருந்தோம்பி உபசரிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைவார். துன்பப்பட்டவர்களுக்கு துணையாக எல்லோர்க்கும் முன்னோடியாக விளங்கினார். அன்னார் ஆற்றிய பணியின் பயனாக அன்னாரது குடும்பத்தவர்கள் கல்வி அறிவு, உத்தியோகம், சிவாலயப்பணி, சமூகப்பணி என்பவற்றில் சிறப்பாக விளங்கி வருகின்றார்கள். இவர் இறுதி வாழ்க்கையில் சுகயீனம் காரணமாக படுக்கையில் இருக்க நேர்ந்த போதிலும் தனது வல்லமையினால் போக வேண்டிய இடங்களுக்கு சக்கர நாற்காலி மூலம் சென்று தன் நோக்கங்களை நிறைவேற்றினார். இறப்பதற்கு சில வாரங்களுக்கு முன்னர் இவர் தன் குல தெய்வங்களாகிய காசிவிநாயகர் ஆலயத்திற்கும், துர்க்கா தேவி ஆலயத்திற்கும் சென்று தரிசித்து தன் விருப்பத்தை பூர்த்தி செய்தார்.

அன்னார் பிரசோற்பத்தி வருடம் ஆனித்திங்கள் 20ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 5-00மணி அளவில் பிள்ளைகள், உற்றார், உறவினர் சோகமே உருவாகச் சூழ்ந்திருக்க இறைவன் திருவடி சேர்ந்தார்.

அவரின் ஆத்மா சாந்தி அடைக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வானோர் விருந்தாயமைந்தாய் விண்மிசை வாழி

அமுதாய மைந்த ஆருயிர்த்தாயே
ஆவலோ டெம்மை அரவணைத்தாயே
இனிதாய் இல்லறம் எமக்களித்தாயே
ஈந்தாய் இறைவழி இனிதுவந்தாயே
உற்றார் ருறவினர் உளமிருந்தாயே
ஊரா நறுதுயர் தீர்த்து வைத்தாயே
என்றுந் தலைவனை ஏத்தி வாழ்ந்தாயே
ஏறமர் கடவுளின் பதந் தொழுதாயே
ஐங்கரன் பதநிதம் அர்ச்சித்தாயே
ஒப்பிணை யில்லா உயர் குணத்தாயே
ஓங்கிய புகழுடன் உயிர் வாழ்ந்தாயே
ஔவியம் பேசா அருந்தவத்தாயே
அஃகமும் தேடி அறஞ் செய்தாயே
பயன்மர முள்ளூர்ப் பழுத்தென வாழ்ந்தாய்
தொழுதாய் துதித்தாய் தொடர்ந்தாய் வானோர்
விருந்தாய் அமைந்தாய் விண்மிசை வாழி
மக்கள் நாங்கள் வையகமீது
உன்னினை வினராய் ஒன்றாய்க் கூடி
நீ செய் நல்வினை தொடரும் நோக்கில்
வாழ்வோம் இங்கு பெறுக நீ சாந்தி.

ஆக்கியவர் — திரு. T. T. கந்தசாமி
ஏழாலை, கிழக்கு. ஓய்வுபெற்ற ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் சிந்தை நிறைந்த "சின்னம்மாக்கா"

## தோற்றமும் மறைவும் :

முகத்தில் தெய்வீகக்களை. உதட்டில் உள்ளத்தின் தெளிவை வெளிக்காட்டும் புன் முறுவல். பேச்சில் யாவரையும் தம்பால் ஈர்க்கும் பெருமிதம். கண்ணில் களிப்பும் அன்பும் களிநடம். கருணை வடிவும் திருவருட் பொலிவும் ஒருங்கே அமைந்தவர்தாம், இம் மண்ணுலகில் நீடு வாழ்ந்து (20-06-1991) அன்று, அன்புப் புத்திரர்கள், புத்திரிகள், இன சனங்கள் மருங்கமர்ந்து இருக்க, ஒருவித சலனமுமில்லாது — சிவப்பேறு பெற்றவர்.

## தொடர்பு :

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்து மூன்றுமாண்டு எனது இல்லற வாழ்க்கை, தெல்லியம்பதியில் அமரத்துவம் அடைந்த — ஆத்மீக வள்ளலும், செல்வந்தனும், பரோப காரியும், வானுயர் மக்கட் செல்வங்களை உலகுக்கு அளித்த வருமான ஸ்ரீமான் அருளம்பலம் கனகசுந்தரம் ஐயா அவர்களது இலட்சுமீகரம் நிறைந்த இல்லத்தண்மையில் ஆரம்பமாயிற்று.

கனகசுந்தரம் ஐயாவும் அவரது தர்மபத்தினியாரும் அவர்களது குழந்தைகளும் எங்கள் குடும்பத்துடன் மலரும் மணமும் போன்று, ஒரு குடும்பமாக வாழ்ந்து வந்தமை எமக்கு மன அமைதியையும் ஆனந்தத்தையும் தந்து எங்கள் வாழ்வு வளம்பெற்று வளர்வதற்கு உதவியாயிற்று.

## அதிசயம் ஆனல் உண்மை :

மகளின் மகப்பேற்றுக்காக எமது மாமியார் மருத்துவ மனையில் தங்கிப் பராமரிக்கவேண்டி, ஒருகிழமை, பத்து நாட்கள் தங்கவேண்டிய காலங்களில் அன்புள்ளம் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையாரின் விருந்தோம்பல், தனிமைப்படுத்தப்பட்ட எமக்கு, ஒரு பெருவிருந்தாக அமையும். அக்காலத்தில் ஐயா அவர்கள், யாழ் நகரில் உள்ள ரேயல் மருந்தகத்தில் கடமை செய்து வந்துள்ளார். (இவர் மலேயன் பென்சனர் என்பதனை நினைவில் இருத்துவோம்) எமது மதிய போசனத்தை இவரே — எனது கச்சேரி அலுவலகத்துக்குச் சுமந்து — தந்துள்ளார். பின் தன் கடமைக்குச் செல்வார். இதனை இன்று யான் நினைவுக்குக் கொண்டுவரும் போது ஐயகோ! என்னே அன்பு! என்னே இவரது சகிப்புத் தன்மை! அன்புள்ளம் கொண்ட அம்மையார் எமக்குச் செய்த உதவிகள் அளப்பரியன. யான் அவரது இல்லத்துக்கு வருவதைக் கண்டதும் ''தம்பி நல்ல தோசை இருக்கு. உன்னுணை ஒன்றென்றாலும் சாப்பிடு'' என்று வலுக்கட்டாயப்படுத்திச் சாப்பிடச் செய்து போடுவார். இவர் போன்று இவர்களது இருபுத்திரிகளும் வந்தோரை வரவேற்று உபசரிக்கும் பாங்கினை இன்றும் காணலாம்.

## ஆலய வழிபாடும் திருவருட் பிரசாதமும் :

கருவிலே ''திரு'' வரப் பெற்ற பேறுடையவராகையினால் மூன்று ஆண்மக்களையும், இரு பெண் மக்களையும் இவ்வுலகத்துக்கு அளித்துள்ளார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் ஒளிவிளக்காகத் துலங்குகின்றார்கள். இவரது மூத்த மகன் (திரு. கணேசரத்தினம்) தமதன்னையின் ஆணைப்படி யாழ் குடாநாட்டின்கண் உள்ள ஆலயங்களுக்கு தமது மோட்டோர்க் காரில் கூட்டிச் சென்று இறைவழிபாட்டுக்கு உதவி செய்வார். திருவருட் பிரசாதங்களை எமக்கும் தருவார்.

## உலக விவகாரம் :

பத்திரிகை வாயிலாக உலக விவகாரம் அறிவதில் மிகவும் ஆர்வம் காட்டுவார். சமயச் சொற்பொழிவுகளை முன்வரிசையில் அமர்ந்து செவிமடுப்பார். பண்ணுடன் பாடப்படும் தேவார திருவாசகத்தை கண்மூடி ஆனந்திப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெரு விருட்சம் :**

*அம்மையாரின் அடியொற்றி மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என்று மூன்று சந்ததி வாழ்ந்து வருவது ஒரு தெய்வீகச் செயல். ஆயிரம்பிறை கண்டு, ஒரு குறையுமில்லாது நீடுவாழ்ந்த அம்மையார் அமைதியான முறையில் ஆழிசூழ் உலகை நீத்து பெரு வாழ்வு பெறுவதற்கு 20-06-1991 அன்று எம்மை விட்டுப் பிரிந்துள்ளார் என்க !*

*சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!*

காசிப் பிள்ளையார் கோவிலடி, **ம. சி. சிதம்பரப்பிள்ளை**
தெல்லிப்பழை.
*28-06-91*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வாழ்க்கையின் வசந்தம்

இளமைக்கால நினைவுகள் பசுமையாக, நீறுபூத்த நெருப்புப் போல் உள்ளத்தின் உள்ளே கனன்று, காலத்திற்குக் காலம் மேலெழுந்து இன்பம் பயக்கின்றன. அண்மையில் அமரரான சின்னம்மாக்கா, என் பெரிய தாயார், தாயார், முத்துமாமி (த. பூ. முருகையாவின் தாயார்) இந்நால்வரும் கூட்டாகவும் தனித்தும் என் இளமைப் பருவத்தில் மனதில் ஏற்படுத்திய அழுமைத் தாக்கம் நினைக்க நினைக்க இன்பம் பயப்பது.

தெல்லிப்பழையில், எமது சுற்றுடலில் என்ன நடக்கிறது, ஏன் நடக்கிறது, என்ற தகவல்களைச் சுடச் சுடச் சேகரித்துக் கொண்டு ஓடிவரும் முத்துமாமி, இவர்களில் தகவல் ஒலிபரப்புச் சேவையையும், என் பெரியதாயார் கொள்கை வகுப்பு தகவல் தொடர்பு அதிகாரியாகவும், சின்னம்மாக்கா விதம் விதமான தின்பண்டங்கள் சமைத்துப் பரிமாறி உள்விவகார வல்லுனராகவும், என்தாயார் நிதித் துறையைச் சிறப்புற நிர்வகித்து ஒரு I. M. F. வங்கி போன்றும் அமைந்ததால் இவர்கள் கூட்டு பயனுள்ளதாக, காசிவிக்ன விநாயகர் தேவஸ்தானம் முதல், துர்க்காதேவி தேவஸ்தானம் வரையிலான ஒரு சிறு வட்டத்தைத் தம் பிடியில் வைத்துக் கொண்டு இதன் புனரமைப்புப் பணியில் பெரும் பொறுப்பேற்றது. ஆண்களைக் கூட அரட்டி அசைத்த பெருமை இந்நால்வருக்கும் உண்டு.

வீட்டு முன் விறுந்தைக்குக் கூட வயதுக்கு வந்த பெண்கள் வர அனுமதிக்கப்படாத நாற்பதுகளின் முற்பகுதியில், சின்னம்மாக்கா கொஞ்சம் புரட்சிகரமான சிந்தனை உடையவர். அவர் குடும்பப்பெண்கள், எங்கள் குடும்பப்பெண்கள் சேர்ந்து 1-50 ரூபா பேசி (Ford

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Standard) காரில் கும்பலாக கீரிமலைக்குப் போவது அன்று நாங்கள் அனுபவித்த முதற் சலுகை. காலை 4-30 மணிக்கு புறப்பாடு. 6-00 மணிக்கு திரும்பிவிடவேண்டும். என் பெரிய தாயார் சிறுவர்களோடு முன் சீற்றில் இருப்பார். பின்னுக்கு ஒருபக்கம் சின்னம்மாக்கா மறைக்க மற்றப் பக்கம் அம்மா மறைக்க நாங்கள் கிழங்கு போல் முட்டிக் கொண்டு எவரும் யார் போகிறார்கள் என்று பார்க்க முடியாமல் இருக்க வேண்டும். இதனிடையில் மனதில் ஒரு கிலி. கீரிமலைப் பிராந்தியத்தில் கொள்ளிவாய்ப் பிசாசுகள் இரவு 12-00 மணிமுதல் காலை 4-00 மணிவரை வரிசையாக நடமாடி வருவோர் போவோரை அடித்துத் துரத்தும் கதை பெரியம்மா கூறியது மனதில் நிழலாடும். கீரிமலையை அண்மித்ததும் நாங்கள் ஒருவரை ஒருவர் கெட்டியாகப் பிடித்துக் கொள்வோம். ஒருநாள் கூட பிசாசுகள் எம்முன் வரவில்லையே என்ற ஒரு ஏமாற்றமும் உண்டு. கேணிகளில் யாராவது பார்த்து விடுவார்களென்று அருகே உள்ள ஊற்றுத்தான் எங்களை வரவேற்கும்.

''பெரிய தங்கச்சி கவனம் கவனம்'' என்ற சின்னம்மாக்காவின் கூச்சலையும் பொருட்படுத்தாமல் என் பெரியதாயார், அலையலையாக நெளிந்த தன் நீண்ட கூந்தலை விரித்துப் போட்டுக்கொண்டு ஊற்றின் உள்ளே, உள்ளே நீந்திக் (நீச்சல் தெரியும் என்ற பெருமை) கொண்டு போய்விடுவார். உள்ளே ஒரு சாமியார் நிட்டையில் நீரை மாத்திரம் அருந்திக் கொண்டு இருக்கிறார். அவரைப் பார்க்கவேண்டும். இவர்களும், இவர்கட்கு அடுத்த பரம்பரையான நாங்களும் வாழ்ந்த காலந்தான் எவ்வளவு இன்பமானது. எம் சொந்த மண்ணில் கால் பதித்து கடற்காற்றை அனுபவித்துக் கொண்டு நடந்து திரிவது எத்துணை மகிழ்ச்சியானது. சிவந்த கற்றாளைப் பூக்களைக் கொத்தாகப் பிடுங்கிக் கொண்டு வந்து வறுத்து உண்டு மகிழ்ந்த இன்பம் சொல்லுந்தரமா? வெள்ளை வெளேரென்ற அரியதரம், நறு நறு என்று கொறித்துச் சீனிமுறுக்கு, நாவில் மெல்லக் கரைந்து சுவைதரும் வெல்லப்பாகு எனப் பார்த்துப் பார்த்து சின்னம்மாக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி, முத்து மாமியிடம் கொடுக்க ஓட்டமும் நடையுமாக அவ கொண்டு தர, நாங்கள் பிய்த்துப் பிடுங்கி உண்டு சுவைத்த அந்த நாட்களை மறக்கத்தான் முடியுமா? அன்பெனும் நெய்யில், ஆர்வமெனும் இனிப்பைப் பிசைந்து, கேண்மையுடன் பொரித்தெடுத்த அப்பண்டங்கள் முன் முன் வகை வகையாக நாம் பார்க்கும் எந்த உணவும் முன்னிற்க முடியுமா?

அழகிற்கு எவரும் ஒவ்வாத வல்லி என்னும் வரிகளை எங்கே கேட்கினும் என் மனக் கண்முன் நிற்பவர் சின்னம்மாக்கா. இதயம் வரை பொழிந்து குளிரச் செய்யும் இளைய நிலாப் போன்றது இவரது தண்ணென் தோற்றம். தாய்மை உள்ளமும், ஒரு குருகலட்சுமிக்குரிய மென்மையும் இவரது அழகிற்கு அழகு செய்வன. மக்கள் ஐவரைப் பெற்று, கண்ணும் கருத்துமாக அவர்கள் நலம் காத்து, நன்நடைநல்கி, கல்வி புகட்டி, தன் பரம்பரைப் பொலிவைப் பேணும் மரபில் மணமுடித்து, ஒருவர் போல் ஐவரையும் வாழச் செய்து ... அப்பாடா போதுமே என்று நாம் அலுக்க, சின்னம்மாக்காவே, பேரப்பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் என்று தன் கடமையின் நிலையை அடுத்த சந்ததிக்கு மாற்றிக் கொள்கிறார். அன்புதான் இவரின் மூப்பற்ற இளமையின் இரகசியமோ?

தானும் வாழ்ந்து, மற்றையவரையும் வாழவைத்த சின்னம்மாக்காவின் வாழ்க்கையே ஒரு இனிய வசந்தமாகும்.

**திருமதி சகிதேவி கந்தையா அவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான

பிரதம சிவாச்சாரியார்

## சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்

வழங்கிய

# பிரார்த்தனை உரை

ஆயுட் பலமும், ஆன்மீகப் பலமும், இலெளகீகப் பலமும் கொண்ட அம்மையார் திருமதி க. மாமாங்கம் அவர்கள். இவவுடைய திருமகனர் திரு. க. கணேச ரத்தினம் அவர்களின் சேவை இவ்வாலய வளர்ச்சிக்கு முழுமையான பங்களிப்பைத் தந்தது என்றுல் அம்மையாரின் தூய வழி நடத்தலும் செம்மையான வளர்ப்புமே காரணமாகும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த இவ்வம்மையாரின் நிறைவான வாழ்வு திருவருளால் பெற்ற பேருகும். தொண்ணூற்று ஐந்து ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்த பெருமாட்டி ஒரு நூற்றுண்டுக்கு உரியவர். எல்லார்க்கும் இது அமையாது. எனவே அவவின் பழுத்த பக்குவம் நிறைந்த ஆன்மா அமைதியும் சாந்தியும் பெற பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம்

# மங்கையர்திலகம் மாமாங்கம்

திருமதி மாமாங்கம் கனகசுந்தரம் அவர்கள் இளம் வயதிலிருந்தே சைவப்பண்பாடு மிக்கவர். ஆலய வழிபாட்டில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். காசிவிநாயகர் தேவஸ்தான வளர்ச்சியில் பெரிதும் ஆர்வம் மிக்கவர். காசிவிநாயகர் அன்னாரது குலதெய்வம். இற்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் மேற்படி ஆலயம் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்பட்டது. திருமதி மாமாங்கம் அவர்கள் திருப்பணி செய்ய வேண்டியதின் அவசியத்தை உணர்ந்தார். எமது தந்தையாரிடம் திருப்பணிவேலைகளைத் தொடக்குமாறு கேட்டுக் கொண்டார். இதன் பிரகாரம் 1968இல் திருப்பணிவேலைகள் ஆரம்பமாயின.

அம்மையார் மாமாங்கம் அவர்கள் ஆதிமூலம் அர்த்த மண்டபம் ஆகியவற்றைப் புதுப்பித்துத் தூபி அமைக்கும் பொறுப்பைத் தாமே ஏற்றுக் கொண்டார். தமது பிள்ளைகளிடம் நிதி திரட்டி அக் கைங்கரியத்தை நிறைவு செய்தார். 1971இல் கும்பாபிஷேகம் நடைபெற்ற போது ஆதிமூல மூர்த்திக்குரிய கும்பாபிஷேகச் செலவுகளையும் தாமே ஏற்றுக் கொண்டார். கும்பாபிஷேகம் நடைபெற்ற தினமான (ஆவணி மாதத்துப் பூச நட்சத்திரத்திலன்று) மணவாளக் கோல உற்சவம் இவரது உபயமாகத் தொடர்ந்து இருபது ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. மேலும் நமது ஆலயத்துக்குப், பல திருப்பணிகள் செய்துள்ளார்கள். இவர்களது குடும்பத்தினரால் பல உபயங்கள் பல ஆண்டு காலமாகச் செய்யப்பட்டு வருகின்றன. திருமதி மாமாங்கம் அவர்கள் துர்க்காதேவி ஆலயம் முதலாய வேறும் பல ஆலயங்களுக்கு நிதியம் வாரி வழங்கியுள்ளார்கள். அம்மையாரது களங்கமற்ற உள்ளமும் தாராள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மையும் வேறு எவரிடமும் காண முடியாது. ஒரு நூற்றுண்டு காலம் இவர் வாழ்ந்தார் என்று கூறினல் இவர் செய்த சிவப்பணிகள் சொல்லாமலே விளங்கும். தமது வயது முதிர்ந்த காலத்திலும் காசிவிநாயகரைத் தரிசனம் செய்ய வேண்டும் என்னும் பெருவிருப்புக் கொண்டிருந்தார். இறைவனடி சேர்வதற்குச் சில நாட்களுக்கு முன்பும் ஆலயவாசலில் வந்து தரிசனம் செய்த பெருமைக்குரியவர். இன்றைய மங்கையர்களுக்கு இவர் ஓர் முன்னேடியாகத் திகழ்ந்தார். அம்மையாரை மங்கையர் திலகம் என்றே கூற வேண்டும். இவரது ஆன்மா சாந்தியடைவதாக.

**சி. கணேசலிங்கக்குருக்கள்**

காசிவிநாயகர் தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
*10-7-91*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆன்ம சாந்தியுரை

தெல்லிப்பழை துர்க்காபுரம் திருமதி மாமாங்கம் கனகசுந்தரம் அவர்களது மறைவு எம்மனை வரையும் ஆற்ருெணுத் துயரில் ஆழ்த்தியது. இவ் வம்மையார் நகுலேஸ்வர ஆதீனத்துடன் நெருங் கிய தொடர்புடையவர். குருபக்தி, கடவுள்பக்தி நிரம்பியவர்.

பெண்ணின் வாழ்வு பூரணம் அடைவது கணவனுல். திருமதி மாமாங்கத்திற்கு வாய்த்த கணவர் அன்பு, அறிவு, அடக்கம், ஒழுக்கம் ஆகிய பண்புகளின் இருப்பிடமும், உயர்குடிப்பிறப்பும், பதவியும், புகழும், படைத்த திரு. கனகசுந்தரம் அவர்கள் ஆவர்.

இவர்கள் இருவரும் பெற்ற செல்வங்கள் ஐவரும் இன்று பலரும் மதிக்கும் நிலையில் கல்வி யும், பதவியும், உட்படப் பதினுறு செல்வங்களும் பெற்றுப் பண்போடு வாழ்கின்ருர்கள். ஆகவே இவர்களைப் பெற்றதனுல் திரு. கனகசுந்தரமும், மாமாங்கமும் பயன் பெற்றவர்கள்.

ஆகவே நல்ல கணவனும், நல்ல வாழ்க்கை யும், நற்புத்திரப் பேறும், பெற்ற மாமாங்கம் அவர்கள் பூர்வ புண்ணியம் உடையவர். திருமதி மாமாங்கத்தின் மறைவினுல் துயருறும் பிள்ளைகள், மருமக்கள், பேரர்கள், சுற்றத்தவர்கள் ஆகி யோருக்கு ஆறுதல் கூறி அவரது ஆன்மா சாந்தி யடைய வேண்டி எல்லாம் வல்ல நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக் கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

நகுலேஸ்வரம், கு. நகுலேஸ்வரக்குருக்கள்
கீரிமலை. (ஆதீனகர்த்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## நன்றி

எங்கள் குடும்பத் தலைவியின் ஈமச்சடங்கு, அந்தியேஷ்டி ஆகியவற்றிற்கு நேரில் வருகை தந்தவர்களுக்கும், உதவிகள் புரிந்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வணக்கம்.

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

இங்ஙனம்
**பிள்ளைகள், மருமக்கள், பேரர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org